தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2011–2012)

(பதினான்காவது பேரவை)

இரண்டாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: 19 APR 2012)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2011–2012)

(பதினான்காவது பேரவை)

இரண்டாவது அறிக்கை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

			பக்கம்
1.	2011–2012 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு	..	iii
2.	முகவுரை	..	v
3.	அறிக்கை	..	vii

இணைப்பு–1

1.	"தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின்" 2006–2007 ஆம் ஆண்டிற்கான முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை பேரவைமுன் வைக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை	..	1–3
2.	"தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின்" 2008–2009 மற்றும் 2009–2010 ஆம் ஆண்டுகளுக்கான 35–வது மற்றும் 36–வது ஆண்டறிக்கைகள் பேரவைமுன் வைக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலாளர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை	..	4–6

இணைப்பு–2

1.	பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	..	7


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பதினான்காவது பேரவை)

2011–2012 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு

(2011–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 03–ஆம் நாள் நியமனம் செய்யப்பட்டது)

தலைவர்

திரு. ஆர். சின்னசாமி

உறுப்பினர்கள்

திரு. பொன். ராஜா
திரு. இரா. மணிமாறன்
திரு. என்எஸ்என். நடராஜ்
திரு. கே.பி. நாகராஜன்
திரு. கா. தமிழரசன்
திரு. ப. சிவக்கொழுந்து
திரு. க. தினகரன்
திரு. க. அன்பழகன்
திரு. இரா. அண்ணாதுரை
திரு. அ. கணேஷ்குமார்

சட்டமன்றப் பேரவைச் செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் : செயலாளர்
திருமதி. கோ. காயத்ரி : இணைச் செயலாளர்
திரு. சு. சந்திரன் : குழு அலுவலர்
துணைச் செயலாளர் நிலை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முகவுரை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, பொது நிறுவனங்களின் கீழ் இயங்கும் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் 2006–2007 – ஆம் ஆண்டிற்கான 33–வது ஆண்டறிக்கை மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் 2008–2009 மற்றும் 2009–2010 ஆம் ஆண்டுகளுக்கான 35–வது மற்றும் 36–வது ஆண்டறிக்கைகள் குறித்து 04.02.2012 அன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆய்வு செய்தது. இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அரசுச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மேற்காணும் அறிக்கைகள் காலதாமதமாக பேரவைக்கு அளிக்கப்பட்டது குறித்து விளக்கமளித்தனர். அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் குழு முன் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் இரண்டாவது அறிக்கையை (2011–2012) குழுவின் தலைவராகிய நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் அளித்த விளக்கத்தின் மீதான இவ்வறிக்கைக்கு 10.04.2012 அன்று குழு தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது.

3. குழுவின் பணிகளுக்குப் பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை–600 009,
10.04.2012,
கர–பங்குனி 28–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2043.

ஆர். சின்னசாமி
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு (2011–2012) 04.02.2012 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில், பொது நிறுவனங்களின் கீழ் இயங்கும் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் 2006–2007 –ஆம் ஆண்டிற்கான 33–வது ஆண்டறிக்கை மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் 2008–2009 மற்றும் 2009–2010 ஆம் ஆண்டுகளுக்கான 35–வது மற்றும் 36–வது ஆண்டறிக்கைகள் குறித்து சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அரசுச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் இரண்டாவது அறிக்கை.

சென்னை–600 009,
10.04.2012,
கர–பங்குனி 28–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2043.

ஆர். சின்னசாமி
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – 1

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் ஆண்டறிக்கை குறித்து சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அளித்துள்ள பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்	2006–2007	31.03.2008	13.11.2008	33 வது அறிக்கை: 7மாதங்கள் 12 நாட்கள்

துறையின் பதில்
(6)

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கக் கூடிய நிறுவனம். இக்கழகத்தின் 2006–2007 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையும், கணக்குகளும் 31.03.2008 அன்று பேரவையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 13.11.2008 அன்று பேரவையில் வைக்கப்பெற்றதால் ஏற்பட்ட காலதாமதம் 7 மாதங்களாக இருந்தும், இக்காலதாமதத்திற்கான விளக்க அறிக்கையும், ஆண்டறிக்கையுடன் இணைக்கப்பெறவில்லை என்று தெரியவருகிறது. காலதாமதம் குறித்து துறை அமைச்சர் அவர்களின், கவனத்திற்குக் கொண்டு சென்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்றும், காலதாமதத்திற்கான விவரத்தையும் குழு அறிய விரும்பியது.

இது குறித்து சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் கழகத்தின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான 33–வது ஆண்டறிக்கை 20.06.2007–ல் தணிக்கைக்குழுவிற்கு சமர்ப்பித்திருப்பதாகவும், தணிக்கையாளர்கள் அக்கணக்குகளை தணிக்கை செய்து சூலை மாதத்தில் தணிக்கை அறிக்கை கொடுத்ததாகவும், தணிக்கையாளர்கள் கேட்ட விளக்கங்களுக்கு பதில் அனுப்பப்பட்டு அவர்களின் விளக்கக் குறிப்புடன் பெறப்பட்ட ஆண்டுக் கணக்குகள் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் கருத்துக்களுக்காக செப்டம்பர் மாதம் அனுப்பப்பட்டு, அம்மாதத்திலேயே இயக்குநர் குழுக் கூட்டத்தில் ஆண்டறிக்கை ஒப்புதல் பெறப்பட்டது என்று குழுமுன் விளக்கமளித்தார்.

மேலும், இவ்வாண்டறிக்கை புத்தகம் அச்சடிக்கப்பட்டு 24.01.2008 அன்று சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறைக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டதை ஆய்வு செய்த துறை, புள்ளி விவரங்கள் தொடர்பாக சில விளக்கங்கள் கோரப்பட்டு திருப்பப்பட்டதனை மீண்டும் 16.4.2008 அன்று அரசுக்கு அனுப்பப்பட்டு, மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களிடம் சட்டமன்றப் பேரவையில் இவ்வாண்டறிக்கையினை வைப்பதற்கான அனுமதி 12.05.2008 அன்று பெறப்பட்டது என்றும் தெரிவித்தார்.

துறையின் பதில் தொடர்ச்சி

(6)

சட்டமன்றக் கூட்டத் தொடர் 14.05.2008–ல் முடிவுற்ற நிலையில் நவம்பர் மாதத்தில் நடைபெற்ற கூட்டத்தொடரில் இவ்வாண்டறிக்கை வைக்கப்பட்டது என்றும், அதனாலேயே இக்காலதாமதம் ஏற்பட்டது என்று துறையின் அரசு முதன்மைச் செயலாளர் மேலும் விளக்கமளித்தார்.

சட்டமன்றப் பேரவையில் அளிக்கப்பட்ட ஆண்டறிக்கையில் பல அச்சுப் பிழைகள் இருப்பதை குழு சுட்டிக்காட்டியதற்கு, இனிவருங்காலங்களில் பிழைகள் இல்லாமலும், உரிய காலத்தில் கணக்குகள் தொகுப்பதற்கும் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கழகத்தின் தலைவர் குழுமுன் தெரிவித்தார்.

வனத்தோட்டக் கழகத்தின் வரும் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை உரிய காலத்தில் பிழைகளின்றி சட்டமன்றப் பேரவைக்கு அளிப்பதாக துறையின் அரசு முதன்மைச் செயலாளர் குழுமுன் உறுதியளித்தார்.

குழுவின் பரிந்துரை

(7)

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான 33–வது ஆண்டறிக்கை காலதாமதமாக பேரவைக்கு வைக்கப்பட்டது குறித்து துறை அளித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லை. இனிவருங்காலங்களில் இது போன்ற காலதாமதங்கள் இல்லாமல் ஆண்டறிக்கைகள் சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கப்பட வேண்டும் எனவும், தவிர்க்க இயலாத நேர்வுகளில் காலதாமதத்திற்கான அறிக்கைக்கு துறை அமைச்சரின் ஒப்புதல் பெற்று அதன் நகலை ஆண்டறிக்கையுடன் இணைத்து பேரவைக்கு அளிக்கப்பட வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது. ஆண்டறிக்கைகள் அச்சுப் பிழையுடன் பேரவைக்கு அளிப்பதை துறை இனி வருங்காலங்களில் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் என்றும் குழு பரிந்துரைக்கிறது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கைகள் குறித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் அளித்த பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்		நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)		(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் மேம்பாட்டுக் கழகம்	வீட்டுவசதி	2008–2009	31.03.2010	12.11.2010	35 வது அறிக்கை: 7 மாதங்கள் 11 நாட்கள்
		2009–2010	31.03.2011	23.08.2011	36 வது அறிக்கை: 4 மாதங்கள் 22 நாட்கள்

துறையின் பதில்

(6)

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் 2008–2009 மற்றும் 2009–2010 ஆம் ஆண்டுகளுக்கான 35–வது மற்றும் 36–வது ஆண்டறிக்கைகள் முறையே 31.03.2010 மற்றும் 31.03.2011 அன்று பேரவைக்கு வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவ்வறிக்கைகள் முறையே 7 மாதங்கள் 11 நாட்கள் மற்றும் 4 மாதங்கள் 22 நாட்கள் காலதாமதமாகியுள்ள நிலையில் 12.11.2010 மற்றும் 23.08.2011 அன்று பேரவையில் வைக்கப்பட்டுள்ளது. இக்காலதாமதம் குறித்து துறை அளித்துள்ள விளக்க அறிக்கையில் முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாகவே இவ்வாண்டறிக்கைகளும் காலதாமதமாக பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து விளக்கம் பெற குழு விரும்பியது.

துறையின் பதில் (தொடர்ச்சி)
(6)

இது தொடர்பாக மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் இந்நிறுவனம் 1974–லிருந்து செயல்பட்டு வருவதாகவும், முந்தைய ஆண்டுகளில் அதாவது 1996–1997 மற்றும் 1997–1998–க்கான அறிக்கைகள் மிகவும் காலதாமதமாக வைக்கப்பட்டுள்ளதாகவும், அதனை தொடர்ந்து காலதாமதம் படிப்படியாக குறைக்கப்பட்டு 2005–2006–க்கான அறிக்கைகள் உரிய காலத்தில் பேரவைக்கு அளிக்கப்பட்டதை முதலில் குழுவிற்கு தெளிவுபடுத்தினார்.

மீண்டும் 2006–2007–ல் காலதாமதம் ஏற்பட்டதன் தொடர்ச்சியாக அடுத்து வரும் ஆண்டுகளில் கணக்குகள் காலதாமதமாக தொகுக்கப்பட்டதன் காரணமாக காலதாமதம் ஏற்பட்டது என்றும், இக்கழகத்தைப் பொறுத்தவரையில் கணக்குகள் வைக்கும் முறையும் செயல்முறையும் வலுவாக இல்லாததாலும் சில நடைமுறை சிக்கலினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். இக்கழகத்தினை ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சரும் திட்டங்கள் சீரிய முறையில், உரிய காலத்தில் விரைந்து நடைபெறுவதற்கும், திட்டங்களுக்கான மானியம் உடனடியாக வழங்குவதற்கும், அனைத்து திட்டங்களுக்கும் ஒரே ஆணை பிறப்பிக்கவும் வழி வகை செய்து ஆணையிட்டுள்ளார் எனவும் குழு முன் எடுத்துரைத்தார்.

துறையின் பதில் (தொடர்ச்சி)
(6)

பல நேர்வுகளில் உள்தணிக்கையாளரும், சட்டமுறைத் தணிக்கையாளரும் சமர்ப்பிக்கும் அறிக்கையில் வேறுபாடுகள் ஏற்படுவதால் அதனை ஒப்புநோக்கி தொகுப்பதற்கு காலதாமதம் ஏற்படுவதாகவும், அதனை சரிசெய்யும் வகையில் தற்போது தாட்கோ நிறுவனத்தில் 43 கணக்கு அலுவலர்களும், உள்தணிக்கையாளர்கள் 4 நபர்களும், 32 மாவட்டங்களிலும் அலுவலகம் உள்ளதாகவும், திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்த மாவட்டந்தோறும் ஒரே சீரான முறையைக் கொண்டுவந்து ஒவ்வொரு திட்டத்திற்கான பதிவேடுகளையும் முறையாகப் பராமரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

எனவே, மேற்சொன்ன நிர்வாக காரணங்களால்தான் 2008–2009 மற்றும் 2009–2010–க்கான ஆண்டறிக்கைகள் காலதாமதமாக வைக்கப்பட்டது என்றும் இக்காலதாமதத்தினை நியாயப்படுத்தவில்லை என்றும் தெரிவித்தார்.

இனிவருங்காலங்களில், கழகத்தின் ஆண்டறிக்கையினை உரிய காலத்தில் பேரவையில் சமர்ப்பிப்பதற்கும், நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள குறைகளைக் களைந்து விரைவாக தணிக்கையினை முடிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக குழுமுன் உறுதியளித்தார்.

குழுவின் பரிந்துரை
(7)

கழகத்தின் ஆண்டறிக்கைகளை காலதாமதமாக பேரவைக்கு அளிப்பதன் பொருட்டு நிர்வாக காரணங்களை துறை கூறுவதை குழு ஏற்க இயலாது. இருப்பினும் தற்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அரசுத் துறைச் செயலாளர் அளித்த விளக்கத்தினை குழு ஏற்றுக் கொள்கிறது.

இனிவருங்காலங்களில், கழகத்தின் ஆண்டறிக்கைகளை உரிய நேரத்தில் சட்டமன்றப் பேரவையில் அளிப்பதற்கு துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரைக்கிறது.

****

இணைப்பு–2

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

14.07.2011 (முதல் கூட்டம்)	சென்னை
26.07.2011	சென்னை
24.11.2011 & 25.11.2011	திண்டுக்கல் மற்றும் கொடைக்கானல்
04.02.2012	சென்னை
14.02.2012 முதல் 22.02.2012 வரை	புதுதில்லி, ஜெய்ப்பூர், கொல்கத்தா மற்றும் போர்ட்பிளேயர் ஆகிய இடங்களில் ஆய்வுப் பயணம்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS